REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இணைப்பில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

திராவிடத்தின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

அரிசிக்கு மட்டும்தானா இப்போதனை?

கட்டளைக் கால்வாய்த் திட்டத்தின் அடிக்கல் நாட்டிய போது முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்டதாவது:—

"நமக்கு அரிசி முக்கிய உணவாக இருக்கிறது. இதை வெளிநாடுகளிலிருந்தோ, வெளி மாகாணங்களிலிருந்தோ எப்பொழுதும் வாங்குவதென்பது இயலாது. எனவேதான் இதுமாதிரியானக் கால்வாய்கள் நமது நாட்டிற்குத் தேவைப்படுகின்றன."

—'தமிழ் நாடு': 20—8—57

மலர் 5] சென்னை: ஆவணி 5௳ புதன் (21—8—57) ★ ★ வெளியூர்: ஆவணி 6௳ வியாழன் (22—8—57) [இதழ் 58

'இந்தி ஏகாதிபத்தியத்திற்கு தமிழ் நாடு பணியாது'

டி. டி. கே. மறுக்கிறார்!

புதுடில்லி, ஆக. 20—

பஞ்சாப் முதலமைச்சரின் பிள்ளை, கள்ளக்கடத்தல் வேலையில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்பட்ட புகாரை நேற்று மக்கள் சபையில் அமைச்சர் டி. டி. கே. மறுத்திருக்கிறார்.

'இந்தியா பல மொழிகள் மட்டும் கொண்ட அரசு அல்ல'

'பல இன மக்களையும் நாடுகளையும் கொண்டதாகும்'

'தமிழ்நாடு எனப் பெயரிடுவதற்கு பிடிவாதமாக மறுப்பானேன்?'

'இலங்கையிலிருந்து துரத்தப்பட்ட தென்னாட்டவருக்கு உதவி எங்கே?'

டெல்லி மக்கள் சபையில் ஈ. வெ. கி. சம்பத் முதல் முழக்கம்

புதுடில்லி, ஆக. 20—

"இச்சகம் பேசியோ, அல்லது நிர்ப்பந்தம் செய்தோ இந்தி ஏகாதிபத்தியத்திற்கு தமிழ்நாட்டைப் பணிய வைத்துவிட எந்தச் சக்தியாலும் முடியாது" என்று, டெல்லி பாராளுமன்றத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் முழக்கமிட்டார்.

"இந்தியா ஒரு பன்மொழி அரசு மட்டுமல்ல; பல இனங்களும், பலப்பல நாடுகளும் கொண்ட ஒரு அரசு ஆகும்" என்று தோழர் சம்பத் அவர்கள் குறிப்பிட்டபோது, சபையின் பல திக்குகளிலிருந்தும் 'இல்லை, இல்லை' என்ற கூக்குரல் கிளம்பியிருக்கிறது!

உள்நாட்டு இலாகா மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்ட தோழர் சம்பத் குறிப்பிட்டதாவது:—

"இலங்கையிலிருந்து துரத்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான தென்னாட்டு மக்கள் இன்று அகதிகளாக இந்தியாவில் வாழுகின்றனர். அவர்களுக்கு உதவியும் உற்சாகமும் தரப்பட்டாகவேண்டும். ஆனால், இன்றுவரை மத்திய சர்க்காரோ, மாநில சர்க்காரோ, அவர்களுக்கு உதவ முன்வரவில்லை.

'அந்தமான் நீக்கோபார் தீவுகளில் இன்றுள்ள ஸ்தல ஆலோசனை குழுவிற்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட குழு ஒன்று அமைக்கப்படவேண்டும். அத்துடன் அங்குள்ள உயர்நிலைப் பள்ளியில், இதர இந்திய மொழிகளோடு தமிழ் மொழியும் கற்றுத்தரப்படவேண்டும்.

'இந்த மத்திய சர்க்கார் நிர்வாகத்தின்கீழ் உள்ள பகுதிகளிலும், லட்சத் தீவுகளிலும் போக்குவரத்து, மற்றும் செய்திப் போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்படவேண்டும்.

'மாநிலப் புனரமைப்பு, பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. பல தமிழ் வழங்கும் பகுதிகள், சென்னை மாநிலத்தில் சேர்க்கப்படவில்லை. அந்தப் பகுதி மக்களின் கருத்தினை, ஒரு வாக்கெடுப்பு மூலம் அறிந்து முடிவுகளை அமுல் செய்தாகவேண்டும். சென்னை மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' எனப் பெயரிடப் பிடிவாதமாக சர்க்கார் மறுத்து வருவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை?

"தென்னாட்டு மக்கள்மீது ஆட்சி மொழியாக—அரசாங்க மொழியாக இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிப்பதை நான் கடுமையாக எதிர்க்கிறேன். சர்க்கார் இந்தப் பிரச்சினையை மிக எச்சரிக்கையுடன் அணுகவேண்டும். இந்த விவகாரத்தில், எவருடைய சம்மதத்தையும் நிர்ப்பந்தத்தால் பெறுவது கூடாது; ஏனென்றால், இந்தியா ஒரு பல மொழி வழங்கும் அரசு மட்டுமல்ல—பல இன மக்களையும், பல நாடுகளையும் கொண்ட ஒரு அரசாகும்.

(இந்த நேரத்தில், 'இல்லை, இல்லை' என்று சபையின் பல திக்குகளிலிருந்தும் கூக்குரல் எழும்பிற்று.)

"இந்தியை அரசாங்க மொழியாக ஆக்குவது என்ற பிரச்சினை இப்போது, ஒரு கூட்டம் மற்றொரு கூட்டத்தின் மீது அரசியல் ஆதிக்கம் செலுத்துகிற—கொடுமை புரிகிற அச்சுறுத்தலாக வளர்ந்துவிட்டது.

"இச்சகம் பேசியோ, நிர்ப்பந்தம் செய்தோ இந்தி ஏகாதிபத்தியத்திற்கு தமிழ்நாட்டைப் பணியவைக்க எந்தச் சக்தியாலும் முடியாது என்று எச்சரிக்க விரும்புகிறேன்."

நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டால்...

துப்பாக்கிப்பிரயோகம் நடைபெறத்தான் செய்யுமாம்!

மக்கள் சபையில் பண்டித பந்த் முரட்டுப் பேச்சு

புதுடில்லி, ஆக. 20—

அறப்போராட்டம், மறியல்போன்ற நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டால் சர்க்கார் துப்பாக்கிகொண்டு சுடுவார்களாம்; அது நியாயமானதுதானும்!

இந்தப் பொருள்படும்படிப் பேசியிருக்கிறார் டெல்லி மந்திரி பண்டித பந்த்!

"நேரடி நடவடிக்கை முறைகளை அரசியல் கட்சிகள் கைவிட்டுவிட்டால், நாட்டில் துப்பாக்கிப்பிரயோகங்கள் நடைபெறாமலிருக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுவோம் என்று நான் உறுதிமொழி தரத் தயாராயிருக்கிறேன்"

என்று பண்டித பந்த் கூறினாராம்!

துப்பாக்கிப்பிரயோகக் கொடுமைகளைக் கண்டித்து மக்கள்சபையில் பல உறுப்பினர்களும் பேசுகையில் குரல் எழுப்பியதற்குப் பதிலளிக்கும்போதுதான் பந்த் மேற்கண்டவாறு பேசினாராம்!

எகிப்தில் கிரேக்கமந்திரிகள்

கிரேக்க பிரதம மந்திரியும் அயல்நாட்டு மந்திரியும், நாசருடன் பேச்சுவார்த்தை நடத்த எகிப்து வந்துள்ளனர்.

'இந்தி ஏகாதிபத்தியம்' என்று கூச்சலிடுகிறார்களே!

பண்டித பந்த் ஓலமிடுகிறார்

புதுடில்லி, ஆக. 20—

'இந்தி ஏகாதிபத்தியத்திற்கு தமிழ் நாட்டைப் பணியவைக்க எந்தச் சக்தியாலும் முடியாது' என்ற தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் முழக்கம் கேட்டு கலக்கமுற்ற உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், இந்திக்கு ஆதிக்கம்கோரி பஞ்சாபில் கிளர்ச்சி செய்பவர்களுக்கு மிகப் பணிவானதோர் வேண்டுகோள் தருவதாக ஓலமிட்டிருக்கிறார்.

"இந்தக் கிளர்ச்சிக்காரர்களுக்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம், அவர்களின் தற்போதைய கிளர்ச்சியால், தங்களுக்கு மட்டுமின்றி நாடு முழுமைக்கும் இதர இந்தியில் அக்கறை கொண்டவர்களுக்கும் பெருந்தீங்கு இழைத்து வருகிறார்கள் என்பதுதான்.

"இந்தி என்பதினால், ஏற்கனவே 'இந்தி ஏகாதிபத்தியம்' என்ற கூச்சல் எழும்பியிருக்கிறது — இன்றுகூட அந்தக் கூச்சல் சபையில் எழுந்தது; 'இந்திஏகாதிபத்தியம்' என்றால் என்ன என்பது எனக்கு தெரியவில்லை. ஆனால் தங்கள் விருப்பத்திற்கு மாறாக, தங்கள்மீது இந்தி திணிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கருதுகின்றவர்கள் இருக்கின்றனர்: எனவே, இந்தியின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்கள்—இந்தியை தேசியமயமாக்குவதிலும், இந்திக்கான நியாயத்தை உணர்த்துவதிலும் நாம், நாட்டில் உள்ள வேறு எந்தப் பகுதியினருக்கும் எரிச்சல் உண்டாக்காமலிருக்க வேண்டும்—என்றபாடத்தை இதிலிருந்து பெற்றாகவேண்டும்" என்றும் குறிப்பிட்டாராம்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நங்கவரம் அக்கிரமம்!

நாட்டினரே காணீர்! நியாயம்தர வாரீர்!

★

2,000

உழவர் குடும்ப உரிமை பறித்து

வயிற்றில் அடிக்கிறார் பண்ணையார்!

★

23—8—57

உழவர்கள் உரிமை பெற

அறப்போர்!

★

இதயமுள்ளோரே!

துணை நிற்பீர்!

—விவசாயிகள் முன்னேற்ற சங்கம், குளித்தலை வட்டம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 21—8—57 புதன்

மேதாவிகள் கூற்று!

தொழில் வளத்தில் வடக்கு முன்னேறியுள்ளது—முன்னேறியும் வருகிறது என்ற உண்மையை நாம் பலமுறை புள்ளிவிவரங்களுடன் எடுத்துக் காட்டி வந்திருக்கின்றோம். அதுவுமன்றி, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் வடக்கின் தொழில் வளத்திற்கு முதலிடம் தந்து, சிற்சில பெரும் பெரும் ஏற்பாடுகளை நிறைவேற்றி வைத்திருப்பதையும், எடுத்துக்காட்டியுள்ளோம். அதையே பின்பற்றி இரண்டாவது திட்டத்திலும் வடநாட்டிற்கு முக்கியத்துவம் தரப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றோம்.

அதுபோன்றே, தென்னகம் தொழில் துறையில் பல்லாண்டு காலமாகப் பின்தங்கிக் கிடப்பதையும் ஏற்கனவே எடுத்துக்காட்டியும், இன்றும் தொடர்ந்து எடுத்துக்காட்டிக் கொண்டும் வருகின்றோம். அது மட்டுமல்லாது முதலாண்டுத் திட்டத்தில் தென்னகம் ஒதுக்கப்பட்டுக்கிடப்பதையும் அதே நிலையில் இரண்டாவது திட்டத்திலும் தென்னாடு அலட்சியப்படுத்தப்பட்டுக் கிடப்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டி வந்திருப்பதுடன், அதற்கொப்ப சில நல்லறிவாளர்கள் அடிக்கடி கூறிவரும் கருத்துக்களை எடுத்துக் காட்டியும் வருகின்றோம்.

ஏகாதிபத்திய காலத்து இந்தியத் துணைக்கண்டத்தின் தொழில்துறை வரலாறு நமது விளக்கத்திற்கு அரணாக அமைந்திருக்கின்றது. அதுபோலவே, இன்றைய இந்தியத் துணைக்கண்டத்தின் தொழில்துறையில் வடக்கு—தெற்கு வேற்றுமை இருந்து வருகின்றது என்பதற்கு, காங்கிரசு ஆளவந்தார்கள் நிறைவேற்றியுள்ள முதல் ஐந்தாண்டுத் திட்டமும், கைக்கொண்டுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் மறுக்க முடியாத புறச்சான்ருக அமைந்து இருக்கிறது.

விந்திய மலைத்தொடரை மையமாக வைத்துத்தான் வடக்கு-தெற்கு எனப் பாகுபடுத்தி, இந்தியத் துணைக் கண்டத்தின் தொழில் வளத்தை நாம் மதிப்பிட்டு வருகிறோம் என்ற உண்மையை இதுவரை ஏற்க மறுத்தவர் எவரும் கிடையாது.

வடக்கு-தெற்கு என்ற பாகுபாட்டிற்கு நாம் விந்திய மலைத்தொடரை வரம்பாகக் கொண்டிருப்பது தவறுடையது என இதுவரை எடுத்துக்காட்டினவர்களும் கிடையாது. ஆனால் சில அரசியல் அப்பாவிகள், மேடைமேல் நின்றுகொண்டு, வடக்கையும் தெற்கையும் மாறி மாறி சுட்டிக்காட்டி, நாம் குறிப்பிட்டுவரும் வடக்கு—தெற்கு விவகாரத்தை இல்லாமல் பொய்யாக்கிவிட்டதாகக் கருதிக்கொண்டு, தங்களுக்குள்ள புன்மதியை பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிருர்கள். அவர்கள் கூற்றில் உள்ள அறியாமையை அறிந்துகொண்ட பொது மக்களும் கைகொட்டி வாய்விட்டு சிரிக்கின்றனர். இது கண்டு, அந்த அரசியல் அப்பாவிகளும் நாம் குறிப்பிடும் வடக்கு—தெற்கு உயிர் பிரச்சினையை பொதுமக்கள் உள்ளத்திலிருந்து தங்கள் அறியாமை அரவத்தின் மூலம் ஒரேயடியாக ஒழித்துக்கட்டிவிட்டதாக அற்பமகிழ்ச்சி அடைந்து கொள்ளுகின்றனர். பரிதாபத்திற்குரிய அரசியல் அப்பாவிகள்!

தங்களைத் தவிர, தங்களைப் போன்று அரசியல் அறிவு பெற்றிருப்பவர்களோ, பேச்சுத் திறம் படைத்திருப்பவர்களோ, எதையும் கூறுவதற்கு உரிமை கொண்டிருப்பவர்களோ நாட்டில் வேறு எவரும் கிடையாது—இருக்க முடியாது என எண்ணிக்கொண்டு இருப்பவர்களும் இருந்துவருகின்றனர். இவர்கள் முன்னர் குறிப்பிட்டுள்ள அரசியல் அப்பாவிகளினும் அற்புதமானவர்கள். இவர்கள் பேச்சும் முன்னர் பேச்சைவிட நகைச்சுவை விருந்தாகும்.

தொழில் வளத்தில் வடக்கு முன்னேறி இருக்கின்றது — முன்னேறிக்கொண்டே போகிறது; அதே நேரத்தில் தெற்கு தாழ்ந்திருக்கின்றது—தேய்ந்துகொண்டே போகின்றது என நாம் கூறிவருவதை, வடக்கு — தெற்கு என்ற சொற்களைத் தம் அறியாமைக்கேற்ப பொருள்படுத்தி மனச்சாந்தித் தேடிக் களிப்பதைப்போல் இல்லாது, பின்னர் குறிப்பிட்ட அரசியல் மேதாவிகள், நமது கருத்தை திரித்துப் பொருள் விரிப்பர். அதாவது, சிறிதளவு நச்சைக் கூட்டி தங்கள் பேச்சுத் திறமையைப் பொதுமக்களிடம் காட்டிக் கொள்வதாகக் கருதி, தங்களுக்குத் தாங்களே சிறப்பைத் தேடிக் கொள்ளுவர். அதே பொழுது தங்களிடம் இயல்பாக இருந்துவரும் நச்சையும் சிறிதளவு கக்குவர்.

விந்தியத்திற்கு வடக்கே தொழில்வளம் பெருகிக் கொண்டே இருக்கின்றது; தெற்கே தொழில்வளம் குன்றிக்கொண்டே போகிறது என்ற நமது குறிப்பை, இரண்டாவதாகக் குறிப்பிட்ட அதிமேதாவிகள், அறிந்தோ அறியாமலோ தவறாகப் பொருள் படுத்திவருகின்றனர். அதாவது, வடநாட்டில் உள்ள ஒவ்வொரு பட்டிதொட்டியும் குறிப்பாக ஒவ்வொரு குச்சும் தொழிற்சாலைகளாக இருந்துவருகின்றன என்ற நம்பிக்கையில்தான் நாம் வடநாடு தொழில் வளத்தில் கூடி இருக்கிறது எனக்கூறிவருவதுபோன்று, இந்த மேதாவிகள், நமது கருத்தை, பொது மக்களிடம் திரித்துக் கூறிவருகின்றனர். தங்களுடைய இப்பொய்மை வலியுறுத்தும் வகையில், வடநாட்டில் தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கின்ற இரண்டொரு பகுதியை எடுத்துக்காட்டுகின்றனர். அவ்வாறு எடுத்துக்காட்டி; வடநாடு தொழில் வளத்தில் மிகமிக முன்னேறி இருக்கின்றது என்ற நமது கூற்று பொய்யானது, அதை ஒருவரும் நம்பக்கூடாது என்று, இந்த அரசியல் மேதாவிகள் பொது மக்களிடம் முறையிடுகின்றனர்.

தென்னாட்டைவிட வடநாடு தொழில் வளத்தில் முன்னேறி இருக்கின்றது என நாம் குறிப்பிட்டு வருவது, இம்மேதாவிகள் பொருள் படுத்திவருவதுபோல அல்ல. வடநாட்டையும் தென்னாட்டையும் கூட்டு மொத்தமாக மதிப்பிட்டு, தென்னாட்டைவிட வடநாட்டில் பலமடங்கு தொழில் வளம் பெருகி இருக்கின்றது—பெருகிக்கொண்டே வருகின்றது என்றே நாம் குறிப்பிட்டு வருகிறோம்.

இதே கருத்தில்தான் வடநாட்டைவிட தென்னாடு தொழில் துறையில் பின்தங்கி இருக்கின்றது என்று ஏறத்தாழ இரண்டாண்டிற்குமுன் இந்தியத் துணைக்கண்டம் வந்திருந்த குருஷ்சேவ்—புல்கானின் குழுவும் குறிப்பிட்டிருந்தது. அதே நிலையில்தான் நாமும் வடக்கு — தெற்கு தொழில்துறை விவகாரத்தை மதிப்பிடுகின்றோம்.

உண்மை இவ்வாறு இருக்க, அந்த அரசியல் மேதாவிகள் நமது கருத்து குறித்து தம் மனம் போனபடியெல்லாம் பொருள்படுத்தி வருகிருர்கள். இத்தகு பொய்ப் பிரச்சாரத்தால், தங்களைவிட்டு வெகு தொலைவு விலகிச் சென்றுள்ள பொது மக்களை, மீண்டும் அரவணைத்துக்கொள்ளமுடியும் என அந்த மேதாவிகள் நம்புகின்றனர் போலும்! அந்தோ! அவர்கள் அடைய இருக்கும் ஏமாற்றத்தையும், முழுத்தோல்வியையும் அறிந்த நாம் பெரிதும் இரங்குகின்றோம்!

அல்ஜீரியா பற்றிய ஐ. நா. முடிவுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவையாம்

பிரெஞ்சு மந்திரி கொக்கரிப்பு

லேமான், ஆக. 19—

"சர்வதேசச் சட்டங்களை பிரான்ஸ் அங்கீகரிக்கிறது என்றாலும், அல்ஜீரியா பற்றிய ஐ. நா.-வின் கட்டளைகளை அது மதிக்காது,"

என்று, பிரெஞ்சு வெளி விவகார மந்திரி பினே தெரிவித்திருக்கிருர்.

"அல்ஜீரியா பற்றி எந்தவிதமான தகவல் கேட்டாலும் தரத் தயாராக உள்ளோம்; ஆனால் நமது விவகாரங்களில் ஐ. நா. தலையிடுவதை நாம் அனுமதிக்க முடியாது,"

என்றும் அந்த மந்திரி கூறினராம்.

சுதந்திர நாடுகள் அமெரிக்காவைப் பாதிக்காதாம்!

டல்லஸ் கண்ணோட்டம்

வாஷிங்டன், ஆக. 20—

அந்நிய நாடுகளுக்கு அமெரிக்கா உதவியளிக்கும் தொகையில் 80,96,50,000 டாலர் குறைக்க வேண்டும் என்று மக்கள் பிரதிநிதி சபை கோரியுள்ளது.

இதைப்பற்றி அமெரிக்க அரசாங்க அமைச்சர் டல்லஸ் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்:—

"ஐசனேவரின் அந்நிய நாட்டு உதவித் திட்டத்தைக் குறைத்தால் அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை சீர்குலைந்துவிடும். அமெரிக்கத் தலைவரை காங்கிரஸ் மதிக்காவிட்டால், அமெரிக்காவை உலக சுதந்திர நாடுகள் மதிக்காது என்பதை உணரவேண்டும்."

வடநாட்டில் உருவாகும் கால்வாய்த் திட்டம்

இந்தியப் பேரரசு ரூ. 4¼ கோடி கடன் வழங்குகிறது

புதுடில்லி, ஆக. 20—

மொத்தம் ரூ. 66,47,00,000 செலவில் அமைக்கப்பட்டுவரும் இராஜஸ்தான் கால்வாய்த் திட்டத்துக்கு இந்திய சர்க்கார் இவ்வாண்டில் ரூ. 4½ கோடி கடனுக அனுமதித்துள்ளனர்.

அரசியல்தியாகிகள் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி

சென்னை, ஆக. 19—

ஏழை அரசியல் தியாகிகளின் பிள்ளைகளுக்கு, எல்லாக் கட்டத்திலும் இலவசமான கல்வியளிக்க சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

உயர்நிலைப் பள்ளிகளில் மட்டுமின்றி, கல்லூரிகளிலும் (தொழில் கல்லூரிகள் உட்பட) படிக்கக்கூடிய அரசியல் தியாகிகளின் பிள்ளைகளுக்குமட்டும், (உறவினர்களுக்கு அல்ல) பள்ளி அல்லது கல்லூரிப் பயிற்சிக் கட்டணம் இல்லாமல் இலவசமாகக் கல்வி அளிக்கப்படும் என்றும் சர்க்கார் உத்தரவு கூறுகிறது.

தென்னாட்டில் கோதுமையைத் திணிப்பதற்குத் தந்திரமா?

வடநாட்டவருக்குத் தாராள அனுமதி

புதுடில்லி, ஆக. 19—

தென்னாட்டு மக்கள், அரிசி உணவுக்குப் பதில் கோதுமைப் பண்டங்களை நம்பி வாழ வேண்டிய நிலைக்கு மத்திய அரசாங்க உணவு இலாகா துரிதப்படுத்தி வருகிறது.

கோதுமையை அரைத்து ரவை, மைதா, சுஜி போன்ற மாவுப் பொருள்கள் மலிவாகக் கிடைக்க வேண்டும் என்று மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாம்.

தென் மாநிலங்களான சென்னை, ஆந்திரம், கேரளம், மைசூர், ஆகிய மாநிலங்களில் தேவையான அளவிற்குக் கோதுமையிலிருந்து கிடைக்கும் மாவுப் பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதற்கு ஒரு புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு மூலம் வடநாட்டில் உள்ள மாநிலங்கள் தென் மாநிலங்களுக்குத் தாராளமாகக் கோதுமையிலிருந்து கிடைக்கும் பொருள்களை ஏற்றுமதி செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதுவரையில், அவ்வாறு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி தேவைப்பட்டது.

தென்னாட்டில் கோதுமையை அரைப்பதற்கான அனுமதி கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாம்!

தென்னாட்டில் இந்தக் கோதுமைப் பொருள்களை அதிகமாக மக்கள் விரும்புவததில்லையாம். அதனால் கோதுமையின் விலை உயராது என்றும், எனவே, வடநாட்டு மாநிலங்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்துவிடக் கூடிய நிலைமை ஏற்படக்கூடுமென கருதுவதற்கில்லையென்றும் கூறப்படுகிறது.

தென் மாநிலங்களில் கோதுமைக்கு நெருக்கடி ஏற்படுமானல் மத்திய அரசாங்கக் கிடங்குகளிலிருந்து தேவையான அளவிற்குக் கோதுமை வழங்குவதென உறுதி அளிக்கப்பட்டுள்ளதாம்.

கோதுமையிலிருந்து மைதா, ரவை, சுஜி மாவு தயாரிக்கும் ஆலைகள் ஏற்றுமதிக்கான அனுமதி பெறுவதற்குக் காலதாமதம் ஏற்படுவதை இந்த உத்தரவு தவிர்த்து, வடநாட்டு ஆலை அதிபர்களுக்குத் தாராள அனுமதியும், வசதியும் அளிக்குமாம்.

60,000 இராணுவ வீரர்கள் குறைப்பு!

லண்டன், ஆக. 20—

கடந்த ஜூன் திங்களுடன் முடிவடைந்த ஓராண்டுக் காலத்தில் மொத்தம் 60,000 அதிகாரிகளும், இராணுவ வீரர்களும் படையிலிருந்து நீக்கப்பட்டனர் என்றும், அதற்குப் பிறகு பிரிட்டிஷ் இராணுவத்தில் மொத்தம் உள்ளவர்களின் எண்ணிக்கை 7,02,100 என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் புதிய பிரதமர் மிகோயன்?

புல்கானின் எதிர்காலம் என்ன?

மாஸ்கோ, ஆக. 19—

ரஷ்யப் பிரதமர் புல்கானின் எதிர்காலம் பற்றி பலவிதமான முரண்பட்ட தகவல்கள் வெளிவந்துகொண்டிருந்தாலும், அவரை மானக்கேட்டிற்கு ஆளாக்கும் வகையில் எதுவும் செய்யப்படமாட்டாது என்று இங்கிருந்து தகவல் தரப்படுகிறது.

இப்போது ரஷ்யக் குடியரசின் தலைவராக இருக்கும் மார்ஷல் கிளெமெண்டி வாரஷிலாவ் பதவியிலிருந்து ஓய்வு பெறுவார் என்றும், அந்த இடத்தில் மார்ஷல் புல்கானின் அமர்த்தப்படுவார் என்றும் கூறப்படுகிறது.

இப்போது உதவிப் பிரதமராக இருக்கும் அனஸ்தாஸ் மிகோயன் புல்கானினுக்குப் பதிலாக பிரதமராக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

திருப்பூர் குமரனுக்கு நினைவுச் சின்னம்

கோவை, ஆக. 20—

1932 ஜனவரியில் திருப்பூரில் உயிர்நீத்த குமரனுக்கு, சென்னை அரசாங்கம் ரூ. 7,500 செலவிட்டு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பியுள்ளது. மாநில முதலமைச்சர் காமராசர் நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்து குமரனின் தொண்டைப் பாராட்டிப் பேசியுள்ளார்.

இருக்குமிடம் தேடி உதவியளிப்பராம்!

அலகாபாத், ஆக. 29—

70 வயதுக்கு அதிகமான முதியவர்களுக்கு உதவியளிப்பதற்கு உத்திரப் பிரதேச அரசாங்கம் ரூ. 25 இலட்சம் ஒதுக்கியுள்ளது. முதியவர்கள் இருக்குமிடம் தேடிச் சென்று இந்த உதவி அளிக்கப்படுமாம்.

இந்த ஏற்பாடு சனவரி 26-ந் தேதி முதல் அமுலாக்கப்படுமாம்.

தொழில் தகராறுகள்

பிரதம நீதிமன்ற விசாரணைக்கு அனுமதிக்கக்கூடாதென கோரிக்கை

கோவை, ஆக. 20—

தொழில் தகராறுகளை பிரதம நீதிமன்ற விசாரணைக்கு அனுமதிக்கக்கூடாது என்றும், அதன் காரணமாக தாமதம் ஏற்படுகிறது என்றும், இதற்காக இந்திய அரசாங்கம் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கவேண்டும் என்றும் தேசிய ஆலைத் தொழிலாளர் சங்க மாநாடு தீர்மானித்துள்ளது.

சவுராட்டிர சமூகத்தைச் சேர்ந்தவர் நகரசபைத் தலைவராவதற்கு எதிர்ப்பு

'கம்யூனிஸ்டுக் கட்சிக் காரியதரிசி அவ்வாறு எதிர்த்துப் பேசுவது சரியல்ல'

கட்சியிலிருந்து விலகும் பொதுவுடைமைக் கட்சி நகரசபை உறுப்பினர் வெளியிடும் தகவல்

மதுரை, ஆக. 16—

மதுரை மக்கள் தொகையில் பெரும்பான்மையான சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் நகரசபைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதை துவேஷ மனப்பான்மையில் கம்யூனிஸ்டுக் கட்சிக் காரியதரிசி பேசியதினால், கம்யூனிஸ்டுக் கட்சியிலும் புதிதாக 'சாதித் துவேஷ மனப்பான்மை புகுந்துவிட்டதைக் கண்டு மனம் வருந்தி கம்யூனிஸ்டுக் கட்சியை விட்டு வெளியேறியுள்ளதாக உறுப்பினர் திரு. அன்னு எஸ். ரெங்கன் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் கூறுவதாவது:—

"16—7—57ல் நகரசபைக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. மீண்டுமொரு சௌராஷ்டிரரை நகரசபைத் தலைவராக்க திரு. என். எம். ஆர். சுப்பராமனும், திரு. டி. கே. ராமாவும் முயற்சிப்பதாகவும், எனவே, சுயேச்சை அபேட்சகரை ஆதரிக்குமாறு நகர கம்யூனிஸ்டுக் கட்சி முடிவு செய்திருப்பதாகவும் நகர கம்யூனிஸ்டுக் கட்சிச்செயலாளர் தமது அறிக்கையில் கூறினர்.

"கட்சி உறுப்பினர்களைக் கலந்து ஆலோசிக்காமல் நகர கமிட்டி இதுபற்றி முடிவு செய்தது தவறு எனவும், மேற்படி இருபிரமுகர்களும் தலைவர் தேர்தலில் தலையிடவில்லை எனவும், குறிப்பிட்டதொரு சமூகத்தைச் சேர்ந்தவர் நகரசபைத் தலைவராவதை செயலாளர் எதிர்த்துப் பேசுவது சரியல்ல எனவும் கூறினேர்.

"கொள்கையுடைய அரசியல் கட்சியொன்றைச் சார்ந்தவரை ஆதரிப்பதே நலம் எனவும் கூறினேன். இதனை எல்லோரிடமும் கூறியுள்ளேன். அதன்படி 22—7—57ல் நடைபெற்ற சேர்மன் உபதேர்தலில் காங்கிரஸ் அபேட்சகரை ஆதரித்தேன். நான் ஏதோ தவறு செய்து மறைத்துவிட்டதாகவும், அதை அவர்கள் கண்டுபிடித்ததாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது கண்டு ஆச்சரியப்படுகிறேன்."

'சுதந்திரப் பயணம்'

தென்னாட்டைப் புறக்கணித்து படமெடுத்த விந்தை

சென்னை, ஆக. 19—

1857-ல் நடைபெற்ற சுதந்திரக் கிளர்ச்சியிலிருந்து இந்திய சுதந்திரத்திற்குப் பாடுபட்டவர்கள், நடைபெற்ற சம்பவங்கள், வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்கள் ஆகியவைகளைச் சித்தரிக்கும் வகையில் மத்திய அரசாங்க விளம்பர இலாகாவின் திரைப் படப் பகுதி ஒரு படம் தயாரித்து வெளியிட்டுள்ளது. அதற்கு 'சுதந்திரப் பயணம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

அந்தப் படம் நாடெங்கும் சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளின்போது வெளியிடப்பட்டுள்ளது.

அந்தப் படத்தில் தென்னாட்டைப் பற்றிய தகவல் எதுவுமே இல்லையாம்! தென்னாட்டில் நடைபெற்ற எந்தச் சம்பவமும் இடம் பெறவில்லையாம்! நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தேசத் தலைவர்களான ஆச்சாரியார், எஸ். சீனிவாச(அய்யர்), டி. பிரகாசம், எஸ். சத்தியமூர்த்தி ஆகியவர்களைப் பற்றிகூட ஒரு குறிப்பும் காணப்படவில்லையாம்.

"இவ்வாறு தென்னாட்டைப் புறக்கணிப்பது அநியாயம்" என்று, படம் பார்த்த 'தேவர்' என்பவர் 'மெயில்' இதழில் கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.

"வடநாட்டைப் போன்றே தென்னாடும், தென்னகத் தலைவர்களும் சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்டுள்ளனர் என்றே தென்னாட்டவர் நம்பி வருகின்றனர்.

"மத்திய அரசாங்க விளம்பர இலாகாவின் இச்செய்கையிலிருந்து நாட்டின் சுதந்திரத்திற்காகத் தென்னாடு ஏற்றிருக்கும் பங்கை மத்திய அரசு பெரிதென மதிக்கவில்லை எனக் கருத வேண்டுமா?" என்று அவர் கேட்டுள்ளார்.

"தென்னாட்டுச் சம்பவங்கள் பற்றிய திரைப் படங்கள் கிடைக்காமல் இருந்திருக்குமானால் கூட, மத்திய அரசாங்கம் தென்னாட்டுத் தலைவர்களின் படங்களையேனும் 'சுதந்திரப் பயணம்' என்ற அப்படத்தில் சேர்த்திருக்கக் கூடுமல்லவா?" என்று, எத்துறையிலும் தென்னாட்டைப் புறக்கணித்து அவமதித்துவரும் டில்லியிடம் நியாயம் கேட்டு, 'தேவர்' தன் கடிதத்தை முடித்துள்ளார்.

புள்ளம்பாடி கால்வாய்த் திட்டம்

திருச்சி, ஆக. 19—

ரூ. 143 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படவிருக்கும் புள்ளம்பாடி கால்வாய்த் திட்டத்தை மாநில முதலமைச்சர் காமராசர் துவக்கிவைத்தார்.

புள்ளம்பாடி கால்வாய் காவிரி யாற்றின்மேல் அணைக்குமேல் துவங்கி இடதுபுறமாக பெருவளை கால்வாய் அருகிலேயே சுமார் 25 மைல் தூரம் நத்தியார்கடத்தி வரையில் ஓடி, அதற்குமேல் 29 மைல் தூரம் சென்று சுக்கிரன் ஏரி வரை பாய்கிறது.

இந்தக் கால்வாயினால் சுமார் 22,114 ஏக்கர் நிலம் பயனடையக்கூடுமாம்.

இதில் 8,831 ஏக்கர் நிலம் நேர்முகப் பாசனமும், மற்ற 13,283 ஏக்கர் குளங்களின் மூலமும் பாசன வசதியைப் பெறுமாம்.

★

கட்டளை கால்வாய்

திருச்சி, ஆக. 19—

மாயனூர் புதிய கட்டளை கால்வாய் தோண்டும் திட்டத்தை முதலமைச்சர் காமராசர் நேற்று துவக்கிவைத்தார்.

இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 156·65 இலட்சமாகும். இதனால் மேலும் 7·468 இலட்சம் டன் அரிசி (அதாவது ரூ 22·5 இலட்சம் பெறுமானமுள்ளவை) உற்பத்தியாகுமென எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ் நாடு சோஷலிஸ்டுக் கட்சி செயலாளர் கைது

தடை உத்தரவை மீறினர்

சேலம், ஆக. 19—

தமிழ் நாடு சோஷலிஸ்டுக் கட்சி செயலாளர் எஸ். பாலசுப்பிரமணியம், சேலம் மாவட்ட சோஷலிஸ்டுக் கட்சி செயலாளர் எஸ். பி. காளியப்பன் மற்றும் கே. பி. ரகுநாதன், கே. வி. குப்புசாமி, அஜீஸ்பேக் ஆகிய 5 சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் போலீசாரின் தடை உத்தரவை மீறி சேலம் வர்த்தக வரி இலாகா அலுவலகத்தின் முன்பு மறியல் செய்ததாகப் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந.-நி.)

வாக்குறுதி தருவதில் குறைச்சலேது?

சென்னை, ஆக. 20—

தென் இந்தியா உருக்கு இரும்பு வியாபாரிகள் சங்கத்தின் சார்பில், இரும்பு உருக்கு கண்ட்ரோலர் ஏ. எஸ். பாம் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

கல்கத்தாவில் 'டெண்டர்கள்' வெளியிடுவதால் தென் இந்திய வியாபாரிகளுக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன என்றும், ஒரே சமயத்தில் கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் 'டெண்டர்கள்' வெளியிட வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

வழக்கமாகத் தரப்படும் பதிலான 'கவனிக்கப்படும்' என்பதையே பதிலாகக் கூறினாராம், இரும்பு உருக்குக் கண்ட்ரோலர்!

வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் அவர், 'உருக்கு இரும்பு ஒதுக்குவதிலும், உருக்குத் தொழில் அபிவிருத்தியிலும் தென் இந்தியா புறக்கணிக்கப்படமாட்டாது' என்று உறுதி கூறியுள்ளார்.

ஆட்குறைப்புக்கு எதிர்ப்பு

நேரடி நடவடிக்கையில் ஈடுபட முடிவு

இந்திய அரசாங்கம் நடத்திவந்த காப்பி நிறுவனத்தில் பணியாற்றிவந்த ஊழியர்கள் பலர் அண்மையில் வேலையிழக்க வேண்டிய அவலநிலையில் உள்ளனர். இதற்குக் காரணம், மத்திய அரசாங்கம் எதிர்பாராத நிலையில் காப்பி நிறுவனத்தின் கிளைகளை மூடிவருவதாகும்.

இந்தப் போக்குக்கு எதிராக ஊழியர்கள் குரலெழுப்பினர்; என்றாலும் பயனற்றுவிட்டது; எனவே, ஊழியர் சங்கம் இறுதியாக நேரடி நடவடிக்கையில் ஈடுபட முடிவு செய்திருக்கிறது.

செப்டம்பர் முதல் தேதிக்குள் தங்கள் குறைகளை அரசாங்கம் ஏற்க மறுத்தால், பொது மக்கள்—தொழிற் சங்கங்கள்—அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெற்று, 'ஆட்குறைப்பை' எதிர்த்து நேரடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று காப்பி நிறுவன மத்திய ஊழியர் சங்கம் முடிவு செய்துள்ளது என்று தெரியவருகிறது.

உழைக்கும் தொழிலாளர் அவதியுறுவதா?

உல்லாச வாழ்வுக்காரர்களின் ஊதியத்தைக் குறைக்காததேன்?

சேலம், ஆக. 19—

தேசிய தபால் - தந்தி ஊழியர் சம்மேளனம்—சேலம் கிளையின் கூட்டம் 18-ந் தேதி மாலை தலைமைத் தபால் காரியாலய காம்பவுண்டில் வழக்கறிஞர் ஆர். தீனதயாளு தலைமையில் நடைபெற்றது. ஆரம்பத்தில் தபால்-தந்தி ஊழியர்கள் சம்மேளனத்தின் கொடியைத் தலைவர் ஏற்றிவைத்தார்.

சேலம் மாவட்ட கூட்டுச் செயற் குழுவின் அமைப்பாளரான கோ. இராமதாஸ் எல்லோரையும் வரவேற்றுப் பேசினர்.

தலைமை வகித்த தீனதயாளு பேசுகையில், தபால் - தந்தி இலாகா ஊழியர்களின் வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

சென்னை மாநில தபால்-தந்தி இலாகா கூட்டு செயற் குழுவின் அமைப்பாளர் ஜி. இலட்சுமணன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"புதிய வரிகள், புதிய நாணய முறைகள் காரணமாக விலைவாசி உயர்வின் காரணமாக சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கே ரூ. 500 கோடி அதிகம் செலவாகும் என்று கூறுகின்றனர். விலைவாசி உயர்வால் எல்லாத் தொழிலாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி கோரி தபால்-தந்தி இலாகா ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்தார்கள். மாதம் ரூ.3,500க்குமேல் சம்பளம் வாங்கும் பெரிய அதிகாரிகளின் சம்பளங்களையும், கவர்னர்களின் சம்பளங்களையும் கணிசமான அளவுக்கு ஏன் குறைக்கக்கூடாது? ஒருசிலர் மாத்திரம் கொழுத்த சம்பளம் வாங்கிக்கொண்டு உல்லாசமாகக் காலங்கழிக்கும்போது உழைக்கும் தொழிலாளர்கள் அவதிப்படுவதா? ஏன் இந்த அவல நிலை?

"எங்களுடைய பிரச்சினைக்காக மட்டும் நாங்கள் போராடவில்லை; 'விலைவாசியைக் கட்டுப்படுத்து; உளுத்துப்போன நிர்வாக இயந்திரத்தை மாற்று' என்பனபோன்ற பொதுமக்களின் பிரச்சினைகளுக்காகவும் போராடுகிறோம்."

சென்னையைச்சேர்ந்த தோழர்கள் பி. எம். கிருஷ்ணன், கேசவன், இராசகோபாலன், சீனிவாசன், மற்றும் பலரும் பேசினர்.

சேலம் நகரசபைத் தேர்தல் வழக்கு

7-வது வார்டில் மறுதேர்தலுக்கு உத்தரவு

சேலம், ஆக. 19—

சேலம் நகரசபைக்கு 7-வது வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுயேச்சை அபேட்சகர் சி. கே. நல்லப்ப முதலியாரின் தேர்தல் செல்லாதெனவும், அந்த வார்டுக்கு மறுதேர்தல் நடத்துமாறும் தேர்தல் கமிஷனரும், சப்-ஜட்ஜுமான ஹம்மப்பா 19-ந் தேதி தீர்ப்பளித்தார். (ந-நி.)

பீடித் தொழிலாளர் அறப்போர்!

சேலம், ஆக. 19—

போலீஸ் தடை உத்தரவை மீறி ஊர்வலமாகச் சென்று கலெக்டர் அலுவலகம் முன்பு மறியல் செய்ததாக 26 பீடித் தொழிலாளர்களையும், பீடிக் கம்பெனி முதலாளி ஒருவர் வீட்டின் முன்னால் மறியல் செய்ததாக 13 பீடித் தொழிலாளர்களையும் (மொத்தம் 39 பேர்) போலீசார் கைது செய்தனர். இதுவரை மொத்தம் 272 பீடித் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், (ந.-நி.)

நிலக்கொடை நிலங்கள் கூட்டுறவு பண்ணைகளாகும்

ரூ. 1 கோடி செலவில் திட்டம் தயாரிப்பு?

புதுடில்லி, ஆக. 20—

நிலக்கொடையாகக் கிடைத்துள்ள நிலங்களில் தனிப்பட்ட குடியானவர்களைக் குடியமர்த்தி சாகுபடி செய்ய இந்திய அரசாங்கம் ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு ரூ. 1 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களை மாநில அரசுகள் அமுல் நடத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் தயாரிக்கப்படுகிறது.

இதற்கிடையில், பீகாரில் கூட்டுறவுப் பண்ணைமுறையில் நிலக்கொடை நிலங்களில் சாகுபடி செய்யவும் மத்திய உணவு—விவசாய இலாகா அனுமதியளித்துள்ளதாம்.

நிலமில்லாத குடியானவர்களுக்கு நிலக்கொடை நிலங்களை அளித்து உற்பத்தியை பெருக்க மத்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதுவரை 45 இலட்சம் ஏக்கர் நிலம் விநோபாவுககுக் கொடையாகக் கிடைத்துள்ளதாம். இதைப் பயன்படுத்திக்கொள்ள ரூ. 50 கோடி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செயலாளர்

கி. மனோகரன் தேர்வு

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செயலாளர் தேர்தல் 9—8—57 மாலை 5-30 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் 31 மாவட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். தேர்தல் ஆணையாளர் திருமதி சத்தியாணிமுத்து அவர்கள், தேர்தல் விதிகள் அனைத்தையும் உறுப்பினர்கட்குப் படித்துக் காட்டி, தேர்தலில் தன்னோடு எல்லோரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தோழர்கள் பி. ஈ. கண்ணப்பா, கி. மனோகரன் ஆகிய இருவரும் போட்டியிட்டனர்.

வாக்கெடுப்பில் அதிக வாக்குகள் பெற்ற தோழர் கி. மனோகரன், மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேர்தல் ஆணையாளர், உறுப்பினர்களுக்குத் தம் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

கடைசியாகப் பொறுப்பாளர் கே. சுப்பிரமணியன் அவர்கள், தேர்தலைச் சிறப்புற நடத்தித் தந்த தேர்தல் ஆணையாளருக்கும் மாவட்ட உறுப்பினர்கட்கும் நன்றி தெரிவித்தார்.

சிங்கப்பூர், ஆக. 20—

கோவாகுபுபாருவில் ரூ.30,000 செலவில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் ஒரு தமிழ்ப்பள்ளி சுதந்திர வாரத்தின்போது திறந்து வைக்கப்படும் என்று தெரியவருகிறது.

நெய்வேலி தரும் கருப்புத் தங்கம்

தொழில் வளத்திற்கு மேலும் நம்பிக்கையூட்டுகிறது

வாஷிங்டன், ஆக. 19—

அமெரிக்காவிலுள்ள சுரங்க நிறுவனம், நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரியிலிருந்து புதிய முறையில் எரிபொருள் தயாரிக்க முனைந்துள்ளதாம். இதனால் மிகக் குறைந்த செலவில் எரிபொருள் மின்சார சக்தியைத் தயாரித்து, நெய்வேலி—வடஆற்காடு பகுதிகளுக்கு மலிவுக் கட்டணத்தில் தர இயலும் என்று கூறப்படுகிறது.

நெய்வேலியில் கிடைக்கும் சாதாரண தரம் உள்ள நிலக்கரியை உயர்ந்ததாக்கும் முறையையும் அந்நிறுவனம் கண்டுபிடித்துள்ளதாம்!

இதே அடிப்படையில், நெய்வேலியிலும் ஆராய்ச்சி நடத்திய பிறகு இந்திய அரசாங்கத்திற்கு அறிவிக்கப்படுமாம்.

நிலக்கரியிலிருந்து தண்ணீரை அப்புறப்படுத்தி ஒரு புதுமுறையில் சாலைகளுக்குப் பயன்படும் 'தார்' தயாரிக்கவும் முடியுமாம்.

ஒரு டன் நிலக்கரியிலிருந்து 25 முதல் 40 காலன் தாரும், 1,300 பவுண்டுகள் கரியும் தயாரிக்க முடியும்என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

'டில்லிப்பெரியவர்'களின் இந்துமத வெறி!

புத்தமதம் தழுவிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகை கிடையாதாம்!

பண்டித பந்த் சட்டத்தைக் காட்டுகிறர்

புதுடில்லி, ஆக. 20—

புத்த மதத்தைத் தழுவியுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கு இதர தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப்படுவது போன்ற சலுகைகள் தரமுடியாதென பண்டித பந்த் கூறியிருக்கிறர்.

அதுபற்றி மக்கள் சபையில் எழுப்பப்பட்ட பல உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் அவர் நிராகரித்திருக்கிறர்.

"இந்து மதத்தை விட்டு புத்த மதத்தைத் தழுவிய பின்னும் அவர்கள் தங்களை இந்துக்கள் என்று அழைத்துக்கொள்ள விரும்பமாட்டார்கள் என்றே கருதுகிறேன். அவர்கள் புத்த மதத்தைத் தழுவுவதற்கே காரணம், அவர்கள் இந்து மதத்தின் மீது கொண்டுள்ள வெறுப்புதான் என் பதை நான் சொல்லியாக வேண்டும். ஆத்மார்த்த நோக்கங்களால் உந்தப்பட்டுத்தான் மதம் மாறினர்களா என்பது எனக்குத் தெரியாது. சமூக—அரசியல் காரணங்கள், அவர்களை இந்த மத மாற்றத்திற்குத் தூண்டியிருக்கலாம். ஆனல் ஒவ்வொரு மத மாற்றமும், ஆத்மார்த்த அடிப்படையை கொண்டதாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. பிரச்சினையின் இந்த அம்சம் பற்றி எனக்குக் கவலை இல்லை: சட்டம் மிகத் தெளிவாக இருக்கிறது. இந்து, மற்றும், சீக்கிய மதத்தைச் சேர்ந்தவரல்லாத வேறெவரும், தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களாகக் கருதப்பட மாட்டார்கள் என்று, இந்த மக்கள் சபை மிகத் தெளிவான விதி வகுத்திருக்கிறது. எனவே, புத்த மதத்தைத் தழுவியவர்களிடம் அனுதாபம் காட்டுவது என்பதோ, வெறுப்புக் காட்டுவது என்பதோ பிரச்சினையாக இல்லை,"

என்று, பண்டித பந்த் வியாக்கியானம் செய்திருக்கிறர்.

உடனே சில எதிர்க்கட்சியினர், 'சட்டத்தை மாற்றுங்கள்' என்று குரல் தந்தனர்.

பந்த்: 'நீங்கள் சட்டத்தை மாற்றினல், நான் அதனை அமுல் செய்கிறேன்; ஆனல் அது மாறும் வரை நான் என்ன செய்ய முடியும்?'

ஒரு உறுப்பினர்: 'ஏன் நீங்கள் சட்டத்தை மாற்றக்கூடாது?'

சபைத் தலைவர்: 'மந்திரி சட்டத்தை மாற்ற முடியாது. போலவே அங்கத்தினர்களும் மாற்றலாம்.'

கழகக் கூட்டங்கள்

★

திருமழிசை:

பெருமாள் கோவில் அருகில்
23—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: டி. கே. போருரான்:
பேசுவோர்:
கண்ணதாசன்
அலமேலு அப்பாதுரை
எஸ். எஸ். தென்னரசு
தி. ந. சம்பந்தம்

★

பொட்டனேரி:

மேச்சேரி பத்ரகாளியம்மன்
கோவில் திடலில்
23—8—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: கே. எஸ். சின்னப்பன்
பேசுவோர்:
டி. கே. தாமரைச்செல்வன்
ப. கண்ணன்

திருவைகுண்டம் வட்டார கழகக் கிளைகளுக்கு:

"திருவைகுண்டம் தி. மு. க. ஏழாவது ஆண்டுவிழாவை யொட்டி தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வரவிருக்கிறர்கள். எனவே, வட்டாரத்திலுள்ள தி. மு. க. கிளைகள் சேலம் வழக்கு நிதி சேகரித்து திருவைகுண்டம் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளரிடம் நேரில் வந்து கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

என்று, திருவைகுண்டம் வட்டாரச் செயலாளர் தோழர் வ. செ. வீராசேகரன் கேட்டுக் கொண்டிருக்கிறர்.

படாஸ்கர் அறிக்கை

சென்னை—ஆந்திர அரசினர் தீவிர பரிசீலனை

சென்னை, ஆக. 21—

தமிழ்நாடு—ஆந்திரா எல்லைப் பிரச்சினைகள் பற்றிய படாஸ்கரின் அறிக்கையை சென்னை அரசினர் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனராம்.

இரு மாநில முதலமைச்சர்களும் இத்திங்கள் இறுதியில் அனைத்திந்திய காங்கிரஸ் கூட்டத்தை முன்னிட்டு டில்லிக்குச் செல்லுகையில் அவர்களுடன் மத்திய உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் இப்பிரச்சினை குறித்து விவாதிக்கக் கூடுமாம்.

'நம் நாடு' இதழ்

விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; கீழ்க்கண்டவர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்க:

புதூர்
அறந்தாங்கி
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்

—நிர்வாகி: 'நம் நாடு'

★★★★★★★★★★★★★★★★★

கடைசி வேண்டுகோள்

குளித்தலையில் மாபெரும் விவசாயிகள் அணிவகுப்பு

★

22—8—57 மாலை 6 மணிக்கு குளித்தலை திரு. வி. க. திடலில்

மு. கருணாநிதி
தலைமையில்

அண்ணா

பேசுவார்

—திருச்சி மாவட்ட தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★

ஆரம்பப் பள்ளிகள் சர்க்கார் வசம்

கி. பாகிஸ்தான் நடவடிக்கை

டாக்கா, ஆக. 21—

ஆரம்பக் கல்வி நிலையங்களின் நிர்வாகத்தை சர்க்காரே நேரடியாக ஏற்றுக்கொண்டுவிட்டதாக கிழக்குப் பாகிஸ்தான் சர்க்கார் அவசரச் சட்டமொன்றைப் பிறப்பித்துள்ளது.

கல்வி புகட்டவந்தவர் கடத்திச் சென்றராம்!

காங்கிரஸ் செயலாளருக்குச் சிறைத்தண்டனை

பாராபங்கி, ஆக. 21—

16 வயது நிறைந்த ஒரு பள்ளி மாணவிக்குப் பாடம் கற்றுத்தர பாராபங்கி மாவட்ட காங்கிரஸ் நிறுவனத்தின் செயலாளரான திரு. ஸ்ரீவாஸ்தா என்பவர் அமர்த்தப்பட்டாராம்; பெற்றோர்கள் இவரை நம்பி மகளை ஒப்படைத்தனராம்; ஆனல் அவர், அந்த இளம் பெண்ணை மாணவியாக மதிக்காமல், மனைவியாக்கிக்கொள்ள நினைத்து திருட்டுத்தனமாகக் கடத்திச் சென்று விட்டாராம்.

பெற்றோர்கள் போலீசில் புகார் செய்ததால் காங்கிரஸ் செயலாளர் பிடிபட்டார். வழக்கு விசாரணைக்குப் பிறகு அவர் குற்றவாளி யென உறுதிப்படுத்தப்பட்டு, நீதிபதி அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

மாநில நிர்வாகத் துறைகளை 'அகில இந்திய' மயமாக்க........!

டெல்லி சர்க்காரின் தீவிர நடவடிக்கைகள்

சிறை நிர்வாகத்தை ஒரே சீராக்க முயற்சியாம்

புதுடில்லி, ஆக. 20—

மாநிலங்களின் நிர்வாகத் துறைகள் அனைத்தையும்கூட அகில இந்தியப் அடிப்படையில் திருத்தி அமைக்கும் ஏகாதிபத்திய போக்கில், டெல்லிப் பெரியவர்கள் தீவிரம் காட்டுகின்றனர்!

இந்தியத் துணைக்கண்டத்து மாநிலங்கள் பலவற்றிலுமுள்ள சிறை நிர்வாகத்தை அகில இந்திய அடிப்படையில் திருத்தி அமைக்க இப்போது டெல்லி சர்க்கார் முயற்சிக்கிறர்களாம்!

இதற்காக, சிறை நிர்வாகத்திற்கென ஒரேவகையான விதிமுறைகளை டெல்லி சர்க்கார் வகுத்து வருவதாக உள்நாட்டிலாகா மந்திரி பி. என். தத்தார் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறர்.

"சிறை இலாகா, மாநில சர்க்கார் சம்பந்தப்பட்ட விஷயம் என்றாலும், சிறை நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவேண்டும் என்ற கவலையால்தான் டெல்லி சர்க்கார், இப்படிச் செய்கிறது"

என்றும் அமைச்சர் தத்தார் கூறியுள்ளார்.

கோரிக்கையை வற்புறுத்த டில்லிக்குச் சென்றனர்!

சென்னை, ஆக. 20—

தென் மாநில என். ஜி. ஓ. நிறுவனங்களின் பிரதிநிதிகள், இன்று டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இரண்டாவது ஊதிய நிர்ணயக் குழு என். ஜி. ஓ-வினரின் ஊதியத்தைப்பற்றியும் ஆராய்ந்து முடிவு கூறவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துகின்றனர்.

சென்றுள்ள தூதுக்குழுவில் தமிழ்நாடு, கேரளா, மைசூர், ஆந்திர என். ஜி. ஓ. சங்க நிர்வாகிகள் இடம் பெற்றுள்ளனர்.

பீஹாரில் தடை உத்தரவு

பாட்னு, ஆக. 19—

வேலைநிறுத்தத்திலும், மற்ற ஆர்ப்பாட்டங்களிலும், அரசாங்க ஊழியர்கள் பங்குகொள்ளக் கூடாது என்று பீகார் அரசாங்கம் தடைவிதித்து, அரசாங்க ஊழியர் விதிகளில் மாற்றம் செய்துள்ளது. இதற்கு பீகார் கவர்னர் அனுமதியளித்துள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விலை உயர்வைத் தடுக்க ஓரளவு கட்டுப்பாடு வரக்கூடும்?

ஐதராபாத், ஆக. 21—

விலைவாசிகள் உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கென மேற்கொள்ளப்படும் நடவடிக்கை எதுவும், முழுக் கட்டுப்பாடு—கட்டுப்பாடின்மை ஆகிய இரண்டிற்கும் மையமாகவே இருக்குமாம்!

உணவுத்தானிய விலை விசாரணைக் குழுத் தலைவர் அசோக் மேத்தா இத்தகவலை சூசகமாக அறிவித்துள்ளாராம்.

'விலையேற்றப் பிரச்சினைக்குச் செய்யப்படும் எந்தவிதப் பரிகாரமும், விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலைக்குப் பாதகமில்லாமலும், பொதுமக்களுக்கு நியாயமான விலையாக அது இருக்கும்படியும் செய்யவேண்டியது முக்கியம்' என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

கோதாவரியில் வெள்ளப் பெருக்கு

10,000 ஏகர் நிலம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டது

பத்ராசலம், ஆக. 20—

கோதாவரி நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. இது இந்த வாரத்தில் இரண்டாவது முறையாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்காகும்.

கடந்த 15-ந்தேதியன்று தும்மாகுடம் அணைக்கட்டில் 11.2 அடி தண்ணீர் நின்றது. பின், அது 9 அடியாக இறங்கி வந்தது; ஆனல் கடந்த ஒரு வாரமாகப் பெய்த பெருமழை காரணமாக அது 23·6 அடியாக உயர்ந்து விட்டது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பத்ராசலம் பிரிவில், 25 அங்குல மழை பெய்திருப்பதாகப் பதிவாகியுள்ளது.

கோதாவரியின் இரு மருங்கிலும் உள்ள சுமார் 10,000 ஏகரா விளைநிலம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டது என்றும் நெல், சோளம் பயிரிடப்பட்டுள்ள ஆயிரம் ஏகரா வில் பயிர்கள் பாழாகிவிட்டன என்றும் கூறப்படுகிறது.

ஆட்சித்துறைத் தமிழ்ச் சொற்கள் அச்சாகி வருகின்றன

முதலில் சிறு பணிமனைகளில் தமிழில் கடிதப் போக்குவரத்து நடைபெறும்

சென்னை, ஆக. 21—

தமிழை ஆட்சி மொழியாக்கும் நடவடிக்கைகளின் முதற்படியாக, மாவட்டங்களிலுள்ள ரெவினியூ இலாகாவின் சிறிய அலுவலகங்களில் கடிதப் போக்குவரத்துக்குத் தமிழைப் பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுமெனத் தெரிகிறது.

தமிழ்க் கையச்சுப்பொறி (டைப்ரைட்டர்) இல்லாத அலுவலகங்களில் முதலில் தமிழில் கடிதப் போக்குவரத்து நடத்தப்படுமாம்.

ஆட்சித்துறை சம்பந்தமான ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் அடங்கிய அகராதி அச்சிடப்பட்டு வருகின்றது. இத்தொகுப்பு அகராதி இன்னும் ஒரு திங்களில் இலாகாக்களுக்குக் கிடைத்துவிடக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தமிழ்ச் சொற்களை அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று தொகுத்துள்ளது.

ஒவ்வொரு இலாகாவின் கடிதப் போக்குவரத்தையும் படிப்படியாகத் தமிழுக்கு மாற்ற இக்குழு ஒரு திட்டத்தைத் தயாரித்து வருகிறது.

டில்லி வியாபாரிகளுக்கு இந்தச் சலுகை ஏன்?

டில்லியிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்படும் (ஆடம்பர பொருள்களல்லாத) பண்டங்களுக்கு விதிக்கப்படும் மத்திய சர்க்கார் விற்பனை வரி பாதியாகக் குறைக்கப்படுமாம்; இவ்வாண்டு ஜூலை முதல் இவ்வரிக் குறைப்பு நடைமுறைக்கு வருமாம்.

பதிவு பெற்ற டில்லி வியாபாரி யொருவரால், மற்ற மாநிலத்தி லுள்ள பதிவு பெற்ற வியாபாரிக்கு அனுப்பப்படும் ஆடம்பர மற்ற பண்டங்களுக்கு (ரூ. 100 மதிப்புள்ள பொருளுக்கு) இப்பொழுது ரூ. 1 வசூலிக்கப்படுகிறது; இனி அது அரை ரூபாயாகக் குறையும்.

பள்ளிக் கட்டிடங்களில், மைதானங்களில் பொதுக்கூட்டம் நடத்துவதற்குத் தடை

சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்தனர்

சென்னை, ஆக. 19—

பள்ளிக்கூடங்கள், இதர கல்வி நிலையங்களின் கட்டிடங்கள், காலி மனைகள், விளையாட்டு மைதானங்கள் முதலியவற்றை, எந்தவித அரசியல் நிகழ்ச்சிகளுக்கும், கூட்டங்களுக்கும் தாக்கூடாது என்று சென்னை சர்க்கார் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கின்றனர்.

'மாகாண, மத்திய சர்க்கார்களின் பல இலாகாக்கள் மட்டுமே அந்தக் கட்டிடங்களையும், மைதானங்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்; அரசியல் அல்லாத காரியங்களுக்கு அவற்றைப் பயன்படுத்தலாமே தவிர, அரசியல் காரியங்களுக்குக் கூடாது' என்று சர்க்கார் தடை விதித்திருக்கிறதாம்.

கேரளத்திற்கு மற்றொரு பொறியியல் கல்லூரி

அடுத்த கல்வி ஆண்டு முதல் கேரள மாநிலத்தில் மற்றொரு பொறியியல் கல்லூரி துவங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம். இது கேரள மாநிலத்தில் இரண்டாவது பொறியியல் கல்லூரியாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.